Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.
**SESSIONS CASE NO.23/2021**

Deposition of PW9 Witness for Defence

Defence Court

Name :R.Sathishkumar Caste:

Father's Name :Rajendiran Calling :

Village : Religion:

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 03rd day of August 2023.

**(A1 and A2 are absent and Petitions filed U/s.317 Cr.P.C is allowed. A3 to A5 are present )**

**முதல் விசாரணை-**

நான் தற்போது காவல் துறையில் பாதுகாப்பு பிரிவில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கு சம்பவ காலத்தில் நான் பரங்கிமலை மோப்ப நாய் பிரிவில் தலைமை காவலராக பணியாற்றி வந்தேன். 12/09/2020 அன்று காலை நான் அலுவலக பணியிலிருந்த போது காலை 08.30 மணியளவில் திருவேற்காடு காவல் ஆய்வாளரிடமிருந்து ஒரு அழைப்பு வந்தது. திருவேற்காடு கோலடி அபிராமி நகர் பகுதியில் உள்ள முட்புதரில் கொலை நடந்துள்ளது என்றும் மோப்ப நாயை அந்த இடத்திற்கு கொண்டு வரச்சொல்லியும் சொன்னார். அதன் பேரில் மதியம் சுமார் 02.30 மணியளவில் நான் மோப்ப நாய் டைசனை அழைத்து கொண்டு சம்பவ இடத்திற்கு சென்றேன். சம்பவ இடத்திலுள்ள இரத்தம் தோய்ந்திருந்த இடத்தில் மோப்ப நாய் மோப்பம் பிடித்து தெற்கு நோக்கி அயனம்பாக்கம் ஏரி வரை சென்றது. யாரையும் கவ்வி

பிடிக்கவில்லை. நான் அயனம்பாக்கம் ஏரியை பார்த்தேன். அதில் தண்ணீர் இருந்தது. இது தொடர்பாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரரணை</u>**

இந்த சம்பவத்திற்கு முன்னர் திருவேற்காடு காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட இடத்தில் நடந்த சம்பவம் சம்மந்தமாக இது போன்ற பணிக்கு சென்றிருந்தேனா என்றால் இல்லை. பொதுவாக வேண்டுகோள் அலுவலகத்திற்கு வரும். மோப்ப நாய் பிரிவின் காவலரின் அலை பேசி எண்கள் காவல் நிலையங்களில் இருக்கும். எழுத்துபூர்வமாக வேண்டுகோள் வந்ததா என்றால் இல்லை. வழக்கு சம்பவ காலம் வரை எத்தனை வருடம் மோப்ப நாய் டைசன் மோப்ப நாய் பிரிவில் இருந்தது என்றால் என்றால் 2 வருடம் வரை இருந்தது. அந்த மோப்ப நாய்க்கு அனுபவம் குறைவு என்றால் சரியல்ல. இரத்தத்தை மோப்பம் பிடித்ததிலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் வரை மோப்ப நாய் ஓடியது. எழுத்துபூர்வமாக அறிக்கை கொடுத்தேனா என்றால் இல்லை. நான் சொல்லியிருப்பது போல் சம்பவ தேதியன்று சம்பவம் சம்மந்தமாக மோப்ப நாய் பணியில் இல்லை என்றும், போலீசார் கேட்டுகொண்டதற்கு இணங்க நான் இருந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.